சீரடி ஸர்ப்ப ஸாயிநாதரின்

அருள் மொழித் திரட்டு

5405

இஃது

ஸ்வாமி வேதானந்தா அவர்களால் தொகுக்கப்பட்டு
தி. அ. சஷ்டி கணேசம் பிள்ளையால் பிரசுரிக்கப்பட்டது.

கணபதி மந்திரம்,
ஆண்டார் வீதி, தெப்பக்குளம் P. O., திருச்சிராப்பள்ளி.

சீரடி சாயிநாதரின் அருள் மொழிகள்-108

1 அஞ்சேல்! நானிருக்க பயமேன்?

2 அருளைப்பெற வேண்டுமெனின் இருளையும் மருளையும் விட்டுவிடு.

3 அமித போஜனம் உட்கொள்ளாதே. அமித போஜனம் வியாதிகளை வளர்க்கும். மித போஜனம் உடலையும் சிந்தையையும் அடக்க தக்க உபாயம்.

4 அயலாரை இகழ்ந்து பேசுவதனால் ஒரு நாளும் நீ உயர்ந்தவனாகிவிடமாட்டாய். எல்லோரையும் உன்னைப்போலவே நினை.

5 அயல் மாதர்களின் உடலைக்கண்டு மோகவெறி கொள்ளாதே. அவை என் கோவிலின் சுவர்கள். அம்மாதரின் உள் ஒளியின் உதவியால் என்னை அடைய முயற்சி செய்.

6 இருக்கும் வீட்டைக் காலிசெய்து வேறு வீட்டிற்குக் குடிபோவது போல் பழைய உடலைவிட்டு புதிய உடலில் குடிபுகுகின்றாய் — செய்யாது விட்டுவிட்ட வேலையைச் செய்ய மீண்டும் தொடங்குகின்றாய். ஆகையால் நீயும் என்றும் இறவாதவனே.

7 இவ்வுடலை விட்ட பிறகும் நான் மிகவும் சுறுசுறுப்பாகவும் தீவிரமாகவும வேலை செய்வேன்.

8 இயமன் உன்னிடம் வரும் முன்னே என்பால் நீ சரண்புகு.

9 உன் மனதினால் என் அருளைப் பெறலாமே யொழிய உன் பணத்தினால் விலைக்கு வாங்க முடியாது. அதை பணத்திற்கு நீ மற்றோர்க்கு விற்கவும் உன்னால் முடியாது.

10 உமி உதிர்ந்த பின்னர் அரிசி நெற்பயிராய் முளைக்காது அதே போன்று உடலைவிட்ட பின்னர் நீ இறைவனைக்காண முயல்வது கடினமும் கயமையுமாகும்.

11 உண்ணும்முன் காக்கைக்கு அன்னமிடு. ஏனெனின் காக்கையானது மற்ற காக்கைகளை அழைத்து உண்பது போல், விருந்தோடு உண்ணும் நற்பழக்கம் உனக்கு உண்டாகும்.

> "துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புறவு நல்கி
> யிறந்தவர்கள் காமுறு மிருங்கட னியற்றி
> யறம் பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லாற்
> பிறந்த நெறி யாலுளதோர் பேருதவி யாதோ"
>
> —கச்சியப்ப சிவாச்சாரியார்

12 உனது பக்தி நிஷ்காமியமாயிருப்பது மிகவும் நன்று. உனது முயற்சிகள் சிற்சில சமயங்களில் ஒருவாறு பங்கமடையும். அப்பொழுது நீ என்னைத் திட்டுவாய். என்னைச் சபிக்கவும் சபிப்பாய். ஆனால் வெகு சீக்கிரத்தில் அத்தகைய பங்கத்திற்கு நானே காரணனென்றும்—உன்னுடைய பெரும் நன்மையைக்கருதி அங்ஙனம் செய்தேனென்றும் நன்குணர்வாய்.

13 உடற் சக்தியைவிட ஆத்ம சக்தியை அதிகமாய்த்தேடு. அத்துடன் நில்லாது அதை மென்மேலும் விருத்தி செய்.

14 உனது தாய் தந்தையர் உனது கல்விக்காக எவ்வளவு வேண்டுமானாலும் பணம் செலவு செய்யலாம். அவர்கள் உனக்காக பரீக்ஷையும் எழுத முடியுமா? அதைப்போன்று தான் நீ நன்றாயிருக்க உன் முயற்சியும் வேண்டும், என் அருளும் வேண்டும். உனது கண்களுக்கு பார்க்கும் சக்தியிருந்தும் சூரியன் அல்லது தீபத்தின் ஒளியின் சகாயமின்றி எதையேனும் பார்க்க முடியுமா ? அதைப்போலவே எதிலும் உன் முயற்சியும் வேண்டும், இறைவன் அருளும் வேண்டும்.

15 உன்னுடைய உள்ளத்தில் எனக்குக் கோவில் கட்டு. புறத்தே ஒன்றும் வேண்டாம். வீடின்றித் தவிக்கும் மாந்தர்கட்கு வீடு கட்டிக் கொடு. உன் வீட்டின் திண்ணைகளை வேலி போட்டு அடைக்காதே.

16 உண்ணும் உணவில் சாரமான பாகம் அதாவது தாதுக்களாய் மாறிய இரத்தம் முதலியன உடலில் தங்கி வாழ்விற்கு உதவியாய் இருக்கின்றது. மற்றப் பாகம் மலமாய்க் கழிகின்றது. இது உடலின் செயல். இதையே போன்று உன் மனம் செய்யவேண்டிய தொழில் ஒன்றுண்டு. மற்றோர் உனக்குச் செய்யும் நன்மைக்காக அவர்கட்கு நன்றி செலுத்தவேண்டும். அன்னோர் தீங்கிழைக்கின் அத்தீங்கை மலமாகப் பாவித்து உடனே மறந்துவிட வேண்டும். தீச்செயல்களைப் பற்றிய எண்ணத்தின் அலைகள் மிகவும் கொடியவை. அவைகளால் நீ ஒரு நாளும் பாதாளத்தில் இழுத்துச்செல்லப்படக்கூடாது.

17 உடல் என்றிருந்தாலும் அழிந்துவிடும். ஆத்மா ஒரு நாளும் அழிவதில்லை.

18 உனது அயரா தெய்வ பக்தியே உனது கஷ்டங்களை எல்லாம் அகற்றும்.

19 உன்னுடைய கடமையை நீ செவ்வனே செய். முடிவைப் பற்றி சிந்திக்காதே. உன் பொறுப்பெல்லாம் என் பொறுப்பாகும்.

20 உன்னை நீ உணர்ந்தால் என்னை நீ உணர்வாய்.

21 உன் மனம் எவர்பாலும் என்றும் குறைவிலா அன்புடனிருக்கட்டும். அன்பே சிவமன்றோ ?

22 உலகில் உன்னை ஒட்டும் யாவும் ஒரு நாள் உன்னை விட்டு விலகிப்போகும். அல்லது அவைகளை விட்டு நீ விலகிப் போவாய். ஆதலால் நிலையற்ற பொருள்களில் உனக்கு மோகம் வேண்டாம்.

23 உனக்கு நேரிடும் துன்பங்களெல்லாம் உன் அனுமதியுடனா உன்னைத் தொடர்கின்றன? அவற்றைப் போலவே உனது கோரிக்கையின்றியே உனக்கு இன்பமும் கிட்டும்.

24 உனது கண்கள் என்னைப் பார்க்கில் எனது கண்கள் உன்னை பார்த்த வண்ணமிருக்கும்.

25 உன்னை உயர்த்து, உன்னை உன் வசமாக்கு, உன்னை உன் உடலிற்கு அடிமையாக்காதே. உனக்கு அது அடிமையாய் இருக்கட்டும்.

> "யோனிவழி யேயுதித்தவ் யோனிவழி யேநினைந்தவ்
> யோனிவழி யேயொடுங்கு மூமர்காள்—யோனிவழி
> வாரா வொருவனையே வந்தித்தால் யோனிவழி
> வாரா வகையருளுவான்"

—சிவஞான வள்ளல்

26 எனது கடமையைச் செய்வதில் என்றைக்கும் எனக்குத் தளரா ஊக்கமுண்டு. நான் ஒரு நாளும் உன்னிடமிருந்து கைம்மாறு வேண்டேன். ஆதலால் என் பேரில் கோவில்கள் கட்டுவதாகவும், குளங்கள் வெட்டுவதாகவும், மடம் நிறுவுவதாகவும், மானியம் எழுதி வைப்பதாகவும், பிரார்த்தனை, பிரதிக்ஞை முதலியன செய்யாதே. நினைத்தவற்றைச் செய்ய முடியாவிடில் அதற்கெனவும் அனுவசியமாக நீ வருந்துவாயல்லவா?

27 என் ஆச்சிரமத்தை அடைந்த மாத்திரத்தில் பெருந் துன்பத்திற்கு ஆளானவர்களும் மிகுதியான சந்தோஷத்தை அடைவார்கள்.

28 எறும்பினுள் என் இருக்கையைக் கண்டோர் என்னை எறும்பீஸ்வரன் என அழைப்பர். நாகத்தினுள் கண்டோர் நாகேஸ்வரன் எனவும், நாகநாதன் எனவும், நாகஸாமி எனவும் அழைப்பர். தம் அகத்தில் கண்டோர் அகத்தீஸ்வரன் என அழைப்பர். பசுவினுள் கண்டோர் பசுபதி என அழைப்பர். சாம்பலில் கண்டோர் சாம்பன் என்பர். வேப்பமரத்தில் கண்டோர் வேம்பன் என்பர். ஆகவே பற்பல ஜீவராசிகளில், பற்பல வஸ்துக்களில், பற்பல உருவங்களில் என்னைக் கண்டோர் எனக்கு பற்பல பெயரிட்டு அழைப்பதன்றியில் பற்பல விதமாகவும் என்னைத் தொழுவர். ஆதலினால் "ஸாயிபாபாவிற்கு ஜே!" என்று சொல்லாதவர்களிடம் சண்டைக்குப் போகாதே.

29 என் அருகில் இருக்கும் வேப்பமரம் இரண்டு கிளை உடையது. அவை இரண்டும் அபூர்வ குணம் உடையன. ஒரு கிளையில் முளைக்கும் இலைகளும் பழங்களும் தித்திக்கும். மற்றொரு கிளையில் முளைக்கும் இலைகளும் பழங்களும் கசக்கும். இதையே போன்று என்னைப்பற்றி புகழ்வாரும், இகழ்வாரும் உண்டு. இதனின்றும் நீ அறிய வேண்டியது யாது? பூ உலகில் பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும், சகஜமெனவும், வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் உண்டெனவும், இன்பமல்லால் துன்பம் இல்லை எனவும், துன்பமல்லால் இன்பம் இல்லை எனவும். உன்னை புகழ்வோரும் இகழ்வோரும் உண்டெனவும், ஆசீர்வதிப்போரும் சபிப்போரும் உண்டெனவும் கண்டுகொள். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகப் பாவிப்பதே சிறந்த நெறியாகும்.

30 என்னுடைய பூத உடலின் சின்னங்கள் என் மகுதியிலிருந்து உங்கள் தேவைக்குப் பேசிக்கொண்டேயிருக்கும்

31 என்னிடம் வருபவர்களுக்கும் என்னைத் தஞ்சம் அடைபவர்களுக்கும் என் உபதேசத்திற்காக என்னிடம் தீவிர நம்பிக்கையுள்ளவர்கட்கும் நான் எக்காலும் உயிருடனேயே இருக்கின்றேன்.

32 என் பேரில் உன் பாரத்தைச் சுமத்தினால் நிச்சயமாக நான் அதைத் தாங்குவேன். நான் ஓர் பெரிய சுமைதாங்கி. நீ ஒரு நாளும் சுமைக்கு அஞ்சாதே.

33 என்றும் எவர்பாலும் எதைமுன்னிட்டும் சினம் கொள்ளாதே.

" கோபத்தால் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடா கோடியே "

—சிவஞான வள்ளலார்

34 என் உபதேசத்திற்காகவும், உதவிக்காகவும் என்னை நீ அடைந்தால் அவைகளை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்.

35 என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதேயிருக்காது. ஏனெனில் யாண்டும் அவர்களின் இல்லத்தில் எதுவும் நிறைந்தே இருக்கும்.

36 என் சந்நிதிக்கு வந்து எவர் என்னை வணங்குகின்றார்களோ அவர்கள் பிறவிக்கடலை நீந்தினவர்களாகிறார்கள்.

37 எந்தக் காரணத்தை முன்னிட்டேனும் எள்ளளவேனும் அகந்தை கொள்ளாதே. அகந்தை அழிவுக்குக் காரணம்.

38 எனது ஊதியை நீ உண்ட மாத்திரத்தில் கை கால் வலிப்பு, காசம், க்ஷயம், குட்டம் முதலாய நோயும், பூதம், பைசாசம், முதலிய தீவினைகள் யாவுமே உன்னை விட்டோடிவிடும்.

39 என் பெயரால் ஆடம்பரமான திரு விழாக்கள் செய்ய வேண்டாம். அவற்றிற்காகச் செலவிடும் பணத்தைக் கொண்டு அதிதிகட்கு அன்னமிடு.

40 எந்த அணுவிலும் நான் உள்ளேன். ஆதலால் மதம் அறியேன், குலம் அறியேன், கோத்திரம் அறியேன், சாதி அறியேன்.

41 என்றும் நான் இறக்கமாட்டேன். ஏனெனின் உன்னைப்போல் நான் ஓர் அன்னை வயிற்றில் பிறக்கவில்லை யல்லவா?

42 எந்த அணுவிலும் என்னிருக்கையை அறிந்தோனே எனக்கினியவன்

"வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச் சித்தாகி யின்ப மாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷியாகி
முத்தாகி மாணிக்கமாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்ததேவே"
—அருட்பிரகாச வள்ளலார்

43 என்னிடம் மனம், மெய், மொழிகளால் சரண்புகு. உன் பணி என் பணி ஆகும். என் மொழிகளில் நம்பிக்கை கொள். ஐயம் கொள்ளாதே.

"மந்திரமும் முதவு மருந்துங் குருவருளுந்
தந்திரமுஞானந் தருமுறையும்—யந்திரமு
மெய்யென்றால் மெய்யாய் விளங்குமே மேதினியில்
பொய்யென்றால் பொய்யாகிப் போம்"

44 என்னை நீ மறந்தாலும் உன்னை நான் என்றும் மறவேன்.

45 என் செயலே யாவும், ஏன் நீ கலங்குகின்றாய்? எல்லாக் கவலையையும் என்பால் விட்டுவிடு.

46 என்னை நீ ஏவு. ஏனெனின் நான் உன் தாசன். உனக்குத் தொண்டாற்றுவதே என் கடமை.

47 என்னை நீ அழைத்தால் எளிதினில் நான் வருவேன்.

48 எந்த உருவத்தில் என்னை நீ வணங்கினும் அந்த உருவத்தில் வருவேன்

49 என்றும் சாஸ்வதமாய் இருக்கக்கூடிய பொருளையே அடைய சதா முயற்சி செய்.

50 எளியோரை உண்பித்தால் என்னை நீ உண்பித்தவனாவாய்.

51 எது வேண்டுமானாலும் என்னைக்கேள். அயலாரை அல்லற் படுத்தாதே. வேண்டுவன நான் தருகின்றேன்.

52 எப்பொழுதும் என்னை நீ நினைந்தால் என் மயமாவாய். புழுவானது குளவியை நினைந்து நினைந்து குளவிபோல் ஆகி விடுகின்றதல்லவா? அதே போன்று நீயும் என் மயமாகி விடுவாய்.

53 என்னை நினைந்து, என்னையுணர்ந்து, என்னைக்கலந்து, என் மயமாகிப் பின்னர் என்னை விட்டகன்றிடில் நீ விபசாரம் செய்பவனாகின்றாய். விபசாரத் தொழிலை விலக்கு,

54 ஏக காலத்தில் அநேக உருவங்களில் என்னை நீ வணங்கிடில் எந்த உருவத்தில் நான் உனக்குக் காட்சியளிப்பதுவென்று எனக்கே ஐயம் உண்டாகிவிடும். ஆகவே தெய்வம் ஒன்றென்றிரு. அதனுருவும் ஒன்றென்றிரு. அதுவே நன்றென்றிரு.

55 சீரடி ஆச்சிரமத்தை எவன் மிதிக்கிருனே அவனுடைய துன்பங்கள் ஒரு முடிவை யடைந்து சௌகரியத்தை அடைகின்ருன்.

56 ஐம்புலன்களையும் அடக்கு. ஐயமில்லை ஐயமே!

57 ஒன்றிற்கும் அஞ்சாதே. என்றும் வீர புருஷனுயிரு.

58 காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியமென்னும் தீய குணங்களை அறவே ஒழித்துவிடு.

59 கடவுளைப்பற்றி பாடிப்புகழ்ந்து தொழுங்கால் உணர்ச்சியுடன் தொழு. உணர்ச்சியின்றி செய்யின் அவருடன் உறவு ஏற்படாது. உறவு ஏற்படாத பக்ஷத்தில் நீ புரியும் யாவும் வீணே.

60 குருவருளாலன்றி திருவருளைப்பெற முடியாது. சற்குரு பாதத்தை நாடு. அவர் தம் ஞானேபதேசங்களைப் பெறு. போலி ஞானிகளின் சொற் கேளாதே.

" குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

—திருமூலர்

61 குழந்தையைப் போன்று மாசற்ற மனதுடையவனுயிரு.

62 குட்டிக் குரங்கு தாய்க் குரங்கை இறுக அணைத்துக்கட்டிப் பிடித்துக்கொள்வதுபோல் என்னை நீ கெட்டியாகப் பற்றிக் கொள். நான் ஹனுமான் அல்லவா? நீ என் குட்டியல்லவா?

63 குடியும், கொலையும், களவும் விட்டுவிடு, குடிப்போனும் களவு செய்பவனும் கொலை புரியத் தயங்கான். ஆதலினல் அம் மூன்று துர்க்குணங்களையும் விட்டுவிடு.

" கொலையிலா றுதவுமன்னங் கூறிற்பே ரமுதமாகுங்
கொலையுளா றுதவுமன்னங் கூறில்வல் விடமதாகும்
புலையர்தம் மனையிலுண்போன் புலையனு மாறுபோலக்
கொலைஞர்தம் மனையிலுண்போன் கொலைஞனே யாவனன்றே"

—பதி பசு பாச விளக்கம்.

" தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

—திருவள்ளுவர்

64 கேணியில் இறைக்க இறைக்க தெளிவான நீர் ஊற்றெடுப்பது போல் தர்மத்திற்காகச் செலவிடும் ஒவ்வொரு பைசாவும் உனக்கு ஒவ்வொரு பவுனுகத் திரும்பும்.

65 சத்தியம் நீ கைக்கொண்டால் நித்தியம் பெறுவது நிச்சயம்.

66 சமாதி என்பதற்குச் சாவு என்று பொருளல்ல. நான் சமாதி யடைந்த பிறகும் என்றும் உனக்கு எனது அருள் கிட்டும். வேற்றுடல் தரித்து வெளிவந்துலவி உனக்கு வேண்டிய உதவியெல்லாம் செய்தே தீருவேன்.

67 சாதித்துவேஷம் உடையவர் நீதியுணராதார். எந்த சாதியாரேயாயினும் சரி அற வாழ்வும் அன்பு வாழ்வுமுடையோர் உயர்ந்தோர். மற்றோர் தாழ்ந்தோர். சாதிகள் ஆண், பெண் என இரண்டேயன்றோ ?

68 சாகாமல் செத்திருப்பதே முத்தி.

69 சர்ப்பத்திற்கு ஒரு நாளும் தொந்திரவு கொடுக்காதே. ஏனெனின் சர்ப்பத்தை ஹிம்சித்தோரின் சந்ததி சிதையுறும்.

70 சீரோங்கி வாழ சீரடி ஆச்சிரமம் வா.

71 சோதிடனிடம் உறவு கொள்வதை விட சோதிநாதனிடம் உறவு கொள். நீ ஜோதியை அடைவாய்.

72 தினந்தோறும் சில நிமிஷங்களேனும் மௌனமாயிருந்து பழகு. சும்மாயிருப்பது சோம்பேறியின் வேலையன்று.

73 துன்பத்தினின்றும் பெறும் விடுதலையே தூய இன்பம்.

> " பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும் பேரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்னது
> அற்றோ ருறுவ தறிக "

—மணிமேகலை

74 நான், எனது என்னும் ஆணவத்தை விட்டுவிடு.

75 நாற்றச் சரீரத்தை தினந்தோறும் நாற்றமறச் சுத்தஞ் செய்.

76 நாள்தோறும் சில நாழிகை நேரமாவது வேப்பமரத்தடியில் அமர்ந்து அம்மரத்தின் காற்றை அனுபவிக்கவும். அம்மரத்தின் இலைகள் உன் மேல் உதிரட்டும். வேம்பும் அரசும் ஒன்றோடொன்று புணைந்திருந்தால் மிகவும் சிலாக்கியம். அங்கு வீசும் காற்று உன் உடல், உள்ளம் சம்பந்தமான எல்லா வியாதிகளையும் அறவே ஒழித்துவிடும். உன் சந்ததியும் ஓங்கும்.

> ஓர் அரசு ஆலும் வேம்பும்
> ஒரு பத்துப் புளியும் மூன்று
> சீருடன் விளவும் வில்வம்
> மூன்றுடன் சிறந்த நெல்லி
> பேர் பெறும் ஐந்து தென்னை
> பெருகு மா ஐந்தும் என்றும்
> ஆர் பயிர் செய்தாரேனும்
> அவர்க் கில்லை நரகம் தானே.

—கார்த்திகைப் புராணம்

77 நிறவெறி பிடித்த மாந்தரனைவரும் மறைமொழி கல்லாதவரே.

78 நீ என்னைப்பற்றி சிந்தித்த மாத்திரத்தில் உன்னுடன் **அசரீரியாய்ப் பேசுவேன்.**

79 நீ ஆகாரம் உண்ணும் இடத்திலும் இறைவனைத் தொழும் இடத்திலும் பகலாய் இருந்தாலும் இரவாயிருந்தாலும் திருவிளக்கேற்றி வை. தீபம் இல்லாதவிடத்து இலக்குமி வாசஞ் செய்யமாட்டாள். நான் பிச்சை ஏற்றேனும் எண்ணெய் வாங்கி விளக்குப் போடுவதைப் பார்க்கின்றாயல்லவா ?

80 நீ இறக்கும் முன்பே பல ஜன்மங்கள் எடுக்கின்றாய். உன்னுடைய குழந்தைகள் யாவரும் உன்னுடைய அவதாரங்கள் தானே? அவர்கட்கு தீங்கிழைப்பின் உனக்கே தீங்கு செய்து கொள்பவனாகின்றாய். இதை நன்குணர்ந்துகொள்.

81 பலனைக்கருதி பணியாற்றாதே.

82 பண வெறி பிடித்தோர் பரகதி அடைய மாட்டார்.

83 பட்சிகளைப் பிடித்து கூண்டில் அடைக்காதே. ஒரு பட்சியின் அடைப்பால் அநேக குஞ்சுப்பட்சிகள் உயிர் துறக்க நேரிடும்.

84 பக்கத்து வீட்டில் நெருப்புப் பற்றி எரிந்தால் அதை பார்த்துக்கொண்டு நீ சும்மாயிராதே. காற்றடிப்பின் உன் வீடும் நெருப்பு பற்றி சாம்பலாகிவிடும். உடனே அங்கு சென்று நெருப்பை அணை. எக்காலத்தும் நீ நன்றாயிருக்க மற்றோர்க்கு நன்றே புரியவும்.

85 பாரினில் பற்றற்று வாழ்வாயாக. "பற்றினால் வருவதே பல பல துன்பம். பற்றற்றவரே பரமானந்தராவர்".

86 பிறந்தும் இறந்தும் உழல்வதே பெருந் துன்பம். பிறவாமலும் இறவாமலுமிருக்க பெருநெறி பிடித்தொழுகு.

87 பிரம்ம நிஷ்டனின் உறைவிடம் பிரம்ம ஒளியை வீசிய வண்ணமிருக்கும்.

88 பெண்ணாசை பிடித்தவர் மண்ணுலகில் பவசாகரத்தில் எந்நாளும் உழல்வார்.

89 பொய் பேசுவோர் மெய்வழிக்குதவார். பொய் பொசுக்கிவிடும்.

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா மவருக்குப்
பொய்யாகாத, மெய்யருக்குப் பொய்யுரைத்தால் தேய்பிறைபோற்
றவங்குறையு மிடியுண்டாகும், துய்யதாய் தந்தையர்க்குப்
பொய்யுரைத்தால் வறுமைபிணி தொலையாவென்றும் உய்யவருடேசிகர்க்குப்
பொய்யுரைத்தா னரகமது வுண்மைதானே.

—அந்தக்கவி வீரராகவ முதலியார்

90 முதல் இடை, கடை, முற்றிலும் யானே.

91 முத்தொழில் முதல்வனை எக்காலும் தொழு.

92 மண்ணாலாகிய தேகம் என்றோ ஒரு நாள் மாய்ந்து மண்ணோடு மண்ணாய்ப்போகும்.

93 மந்திரமும், தந்திரமும், மருந்தும் நானே. கேட்பதைத் தருகின்றேன். இவற்றில் உனக்கு எது வேண்டும்?

94 மதத் துவேஷம் செய்பவர் நல்லோரன்று. அவர்கள் எவர்களாயினும் சரி மதம் பிடித்தோர்களே. மதம் கொண்டோர் ஹிதம் அறியார்.

95 மங்கையர் யாவரும் நன்மங்கையரே ஆவார். ஏனெனின் அன்னோர்கள்பால் ஆடவர்கள் அடையும் இன்பமே ஆடவர்கட்கும் எனக்கும் இடையறாத உறவையளிக்கும். எனவே பெண்கள் ஞானச்சுடரின் தூண்டு கோலாவார். இவர்களை ஞான குருவாய்க் கொள்ளாததுமின்றி இழித்துரைத்தல், துன்புறுத்தல் முதலியன மிகவும் கொடிது.

96 மண்ணாசை பிடித்தவர்கள் விண்ணுலகிற்கு ஒரு நாளும் செல்லார்.

"பொன்னாசை யோடும் புலைச்சியர் தம் பேராசை
மண்ணாசை மண்ணுகின்ற மண்ணாசைப் பற்றறுத்தே
யுன்னாசை கொண்டேயென் றுற்றியப்பா நான் மகிழ்ந்துன்
மின்னாரும் பொன்மேனி வெண்ணீற்றைப் பாரேனோ"

—அருட்பிரகாச வள்ளலார்

97 மின்சார சக்தி ஒரு நிலையத்தில் உற்பத்தியாகின்றது. அங்கிருந்து பல ஊர்கட்குச் சென்று கோடிக் கணக்கில் பலத் திறமும் பல நிறமும், பல உருவமும்கொண்ட விளக்கு களில் பிரகாசிக்கின்றது. அதைப் போன்று தான் பரஞ் சோதியும் பலத்திறப்பட்ட, பல கோளங்களில் பல தேகங் களில் பிரகாசிக்கின்றான். அத்தேகங்களில் உந்தனின் தேகமும் ஒன்று. ஆதலால் ஒருவருக்கும் மனம், மெய், மொழி களால் தீங்கு இழைக்காதே.

98 விண்ணுலக வாழ்க்கையை விரும்பின் மண்ணுலக வாழ்க்கையை மற.

99 விரும்பும் தனம் வேண்டுங்கால் கொடுப்பேன். கடன் வாங்கி என் பெயரால் செலவு செய்யாதே.

100 விந்தைச் சிந்தி நொந்து கெடாதே. பொறுமையை விட்டுவிடு. என்றும் சினங்கொள்ளாதே. மாசில்லாத மனத்துடன் வாழு. வைராக்கிய சித்தனாயிரு. அஹிம்சையைக் கைக் கொள். அங்ஙனம் செய்வாயாகில் நீ எனது அரிய அன்பனாவாய்.

101 வினையின் பயனாய் உடலெடுத்தாய். வினையொழிந்தக்கால் உடலைவிட்டு நீங்கி விடுவாய். உன் பெற்றோர்களிடம் நீ ஒன்றியிருந்த காலத்து (கர்ப்பவாசம் செய்யுங்கால்) கஷ்டம், நஷ்டம் ஒன்றும் அறிந்திலாய். உனது அம்மையும் அப்பனும் நானே. இதை நீ நன்குணர்வாய். இதுகாறும் அம்மை வேறு, அப்பன் வேறு என்று நினைவுற்றிருந்தாய். இப்பொழுதேனும் அவை இரண்டும் ஒன்றெனக்கொள். மீண்டும் என்னுடன் ஒன்றித்தாயானால் உன் கஷ்டங்கள் யாவும் உடனே உன்னை விட்டகலும்.

102 விக்கிரக ஆராதனை செய்வது பிசகன்று. ஒன்றும் அறியாத காலத்தில் அத்தகைய ஆராதனை மிகவும் அவசியம். ஞானத்தினல் பகவானைத் தொழ வல்லமை பூண்ட காலத்து விக்கிரக ஆராதனையை நிறுத்திவிடு. நீ குழந்தையாய் இருந்த காலத்து அன்னையிடம் பால் அருந்தினுய். வயது முதிர்ந்த காலத்து நீ அங்ஙனம் செய்வாயா? அவள் தான் உன்னைப்பால் அருந்த விடுவாளா? அதைப்போன்று தான் விக்கிரக வழிபாடும். இதை நீ நன்குணர்வாய்.

"சொல்லினுஞ் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லினு மாசற்ற வாகாயந் தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லினு மன்ப ரிடத்திலுமீச னிருக்கு மிடங்
கல்லினுஞ் செம்பிலு மோவிருப்பா னெங்கள்
கண்ணுதலே"

"உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூற்றையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேனுயர்
பொன்னெனவே
ஒளியிட்டதாளிரண் டுள்ளே யிருந்துவ துண்மையென்று
வெளியிட்டடைத்து வைத்தேனிமை யொன்றும்
வேண்டிலனே"
—பட்டினத்து அடிகள்

103 நானே கணபதி, நானே முருகன், நானே சிவன், நானே ராமன், நானே கிருஷ்ணன், நானே ஹனுமான், நானே இலக்குமி, நானே இராஜ ராஜேஸ்வரி. இது மட்டுமா? எல்லாம் யானே.

104 சோதனைக்கு அஞ்சாதே. கல்லூரியில் கடினமான பரீக்ஷை எழுதி, கடினமான தணிக்கைக்குள்ளாகி பரீக்ஷையில் தேறிய ஒருவனை மாணவ உலகம் புகழும் மாநிலம் பாராட்டும். ஏனெனில் அங்ஙனம் தேறியவன் சிறந்த அறிவாளியன்றோ? அதையே போன்று இப்பூவுலக வாழ்வில், கடைத்தேறும் ஜன்மத்தில் நீ கடைசியாக பரீக்ஷிக்கப்படுகின்றுய். ஆதலினல் சோதனையும், கஷ்டமும், நஷ்டமும் அதிகமாயுண்டு. இவற்றிற்குள்ளாகி நீ தேறிவிட்டால்

1 உலகம் போற்றும் உத்தமனுகி விடுகின்றுய்.
2 பிறவிக் கடலினின்றும் மீட்கப்படுகின்றுய்.
3 இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுகின்றுய்.

தீயில் போட்டு எடுக்கப்பட்ட பொன் முதலியன மாசகன்று சுத்தமாவது போல் துன்பமெனும் தீயின் துணை கொண்டு நீ சுத்தமாக்கப்படுகின்றுய். இவ்வுலகில் நீ அனுபவிக்கும் துன்பம் இறைவனின் உலகில் நீ அனுபவிக்கப்போகும் இன்பத்தின் அறிகுறி. இதை நீ நன்குணர்வாயாக. துன்பத்தை சகிப்பது உனக்கு மிகுந்த கஷ்டமாயிருப்பின் இயமனைக்கண்டு அஞ்சிய மார்க்கண்டேயர் இறைவனை இறுகக் கட்டிப் பிடித்தது போல் என்னை நீ கட்டிப்பிடி. உன்னை ஒரு நாளும் கைவிடமாட்டேன்.

"ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்ருே
டொன்று
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினே
காட்டுவிப்பானு மிருவினேப்பாசக் கயிற்றின்வழி
ஆட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லேயம்பலத்தே".

—பட்டினத்து அடிகள்

வீணில் சிந்தை கலங்கி நொந்து கெடாதே.

105 சூதாட்டம் ஆடுவது தீது. சூதாட்டத்தில் ஜயிக்க என் கடாக்ஷத்தைத் தேடாதே. சூதாட்டத்திற்கு மாறு பெயர் சூட்டி அச்சூதில் என்னேத் துணேவனுய் அழைக்காதே.

"உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வன்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோடன் பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து"

—புகழேந்திப் புலவர்

106 சோற்றைச் சுருக்கி சோர்வுற்று சுகத்தைக் கெடுத்து உடல் நலம் மிகக்குன்றி நோய்வாய்ப்பட்டுக்கொண்டு தன்னே அண்டினவர்க்கும் தக்க உண்டி கொடுக்காது பணத்தைச்சேமித்து அருந்தவத்தால் பெற்றெடுத்த மைந்தர்பால் சொத்தைக் காட்டி, சொத்தைக் கொடுத்து, அவர்களே சொத்தைகளாகவும் சோம்பேறிகளாகவும் விட்டுவிட்டு அவர்களுடைய பிற்கால சுக வாழ்வையும் பாழாக்குவதைவிட அவர்கட்கு சொத்திற்குப் பதிலாக என்றும் குன்ருத கனமுள கல்விச்செல்வத்தையும் கலேச்செல்வத்தையும் அறிவுச்செல்வத்தையும் அளவிறந்து கொடுத்துச்செல்லல் மிகவும் நன்றன்ருே? நன்கு யோசித்து உணர்மின்.

107 ஏனேயோரையும் பலவகையில் துரோகித்துப் பொருள் திரட்டி, மற்ருேர்பால் விட்டு விட்டு மாய்வதில் நீ அடையும் பயன் யாது? தீய வழியில் வந்த பணம் தீய வழியே செல்லுமன்ருே? துரோகம் செய்து சம்பாதிப்பவனும் சம்பாதித்த பொருளே அனுபவிப்பதில்லே. துரோகம் செய்யப்பட்டவனும் பணத்தையிழந்து பரிதவிக்கின்ருன். துரோகத்தினுல் ஈட்டிய பொருளே உழைப்பின்றி கொடையாகப் பெற்ருேரும், துரோகியின் மக்களும் உருப்படுவதில்லே. தீய வழியில் வந்த பொருளே தேவாலயங்கட்டு தர்மமாக எழுதி வைப்பினும் தேவாலயங்கள் கட்டினும் தெய்வமும் ஒரு நாளும் ஏற்றுக்கொள்வதில்லே. ஆகவே வாழ்வில் எல்லோரும் ஏமாற்றமடைந்து சொத்தை இழந்து பிழைக்க வழியறியாது திகைத்துத் தேம்பி வாடி நிற்கின்றனர். ஆதலினுல் ஒருவருக்கும் என்றும் துரோகம் செய்யாதே.

108 துறவிகட்கும், ஞானிகட்கும், போலி ஞானிகட்கும் ஆயிரக் கணக்கிலும், லக்ஷக்கணக்கிலும் திரவியத்தைக் கொடுத்து ஏமாற்றி மோக்ஷ வாழ்வினைச் சாசனம் பெற்றுவிடலாமென்ற அசட்டு எண்ணத்தை அடியோடு விட்டுவிடு. ஒருவன் தனனுடைய ஞானத்தினால், தவத்தினால், முயற்சியினால் முத்தியை அடையலாமே யொழிய தன்னுடைய தனத்தை அயலார்க்கு கொடுப்பதினால் ஒரு நாளும் அதைப் பெறமுடியாது. **மோக்ஷம் விலைக்கு வாங்கக் கூடியதோர் பொருளன்று.**

ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் பாடிய கீதாசாரம்.

இன்னுயிரின் இதயத்தில் இறைவன் உள்ளான்
எல்லாந்தன் மாயைதனிற் சுழலச் செய்வன்
அன்னவனுக் காளாவாய், அருள் புரிவிப்பன்.
அச்சமில்லை, இடரில்லை, அழிவுமில்லை.
என்மனத்தன் என்னன்பன் என்னைப் பூசிப்போன்
என்மயமாவான் யானும் அவனுள் வாழ்வேன்
சொன்மனத்தைக் கடந்தசுகப் பொருளாம் என்னைத்
தூயசரண் புகுந்தின்பந் துலங்குவாயே!

கீதாசார்யனின் வேற்றுருவாகிய நம் சாயி பாபாவின் உபதேசம் யாவும் இது வேயன்றோ?

குறிப்பு :—உபதேச மொழிகளுடன் ஏனைய ஜீவன் முக்தர்கள், தமிழ் வல்லுணர்கள் முதலியோர் பாடிய ஒன்றித்த கருத்துகள் அடங்கிய செய்யுள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

> " முன்னோர்கள் மொழிபொருளேயன்றி அவர் மொழியும்
> பொன்னே போற் போற்றுவம் "

என்னும் இலக்கிய மரபினுக்கிணங்க முன்னோரின் இன்றியமையாத மொழிகளும் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

—வேதானந்தா

தந்தி :- "பாபுலர்" Tel :- " POPULAR"

ஆபரண கற்கள்

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயாரித்த,
அசல் வைரங்களைப்போல்,
பல வர்ணங்களுடன் பிரகாசிக்கும்படியும், உறுதியும் உள்ள

★ பாபுலர் வைரங்கள் ★
சிரஞ்சீவி வைரங்கள்

சிகப்பு, ஸ்கைபுளு, மற்ற எல்லா விதமான கலர் கமலங்களும்,
எல்லா சைசுகளிலும் நயமான சரக்குகள், குறைந்த விலைகளுக்கு
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

பாபுலர் நகை கேட்லாக்,
பல புதிய டிசைன்களுடன் அச்சிட்டு உ[illegible]து
எங்களிடம் குறைந்த விலைக்கு கிடைக்கும்.

பாபுலர் டைமண்ட்ஸ் Co.

POPULAR DIAMONDS

99, பெரிய செட்டித் தெரு,

திருச்சிராப்பள்ளி.

Popular SIRANJIVI RANGOON ELECTRIC DIAMONDS

(பெரிய செட்டித் தெருவில் முதல் கடை)

தி. அ. சடாக்ஷரம் & கோ.,

சுபாஸ்போஸ் ரோடு,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

★

ஐயா,

எங்கள் கம்பெனியில்
ஸாயிபாபாவின் நேர்த்தியான
வெள்ளிப் பதக்கங்களும், பல வர்ணப்
படங்களும் கிடைக்கும்.

உயர்ந்த ரக ரப்பர் ஸ்டாம்பு முத்திரைகளும்,
பித்தளை, வெள்ளி சீல்களும்
குறைந்த விலையிலும்,
நேர்த்தியாகவும் தயாரித்துக் கொடுக்கப்படும்.
படங்களுக்கு சட்டம் போட்டுக் கொடுக்கப்படும்.

நோபிள் பிரஸ், திருச்சி